**27 செப்டம்பர், 2026**

## பொதுக்காலம் 26-ஆம் ஞாயிறு

**எசேக் 18:25–28; பிலிப் 2:1–11 (அல்லது 2:1–5); மத் 21:28–32**

### முன்னுரை

ஒருமுறை ஆசிரியர் ஒருவர் தன் மாணவர்களிடம் ஒரு வெள்ளைத் தாளைக் காட்டினார். அதன் நடுவில் ஒரு சிறிய கருப்புப் புள்ளி இருந்தது. "உங்களுக்கு என்ன தெரிகிறது?" என்று கேட்டார். பெரும்பாலான மாணவர்கள் அந்தச் சிறிய கருப்புப் புள்ளியைப் பற்றியே பேசினார்கள்; அதைச் சுற்றியிருந்த பெரிய வெள்ளைத்தாளைப் பற்றி யாருமே குறிப்பிடவில்லை.

ஆசிரியர் புன்னகையுடன் கூறினார்: “நாம் வாழ்க்கையையும் இப்படித்தான் பார்க்கிறோம். தவறுகளையும் தோல்விகளையும் மட்டுமே கவனிக்கிறோம்; நம்மைச் சுற்றியிருக்கும் கடவுளின் அருளையும் அளப்பரிய வாய்ப்புகளையும் மறந்துவிடுகிறோம்.”

இன்றைய நற்செய்தியில், இயேசு இரு மகன்களைப் பற்றிய உவமையைக் கூறுகிறார்: முதல் மகன் முதலில் “மாட்டேன்” என்று சொல்லிவிட்டு, பின்னர் மனம்மாறி வேலை செய்யச் செல்கிறான்;

இரண்டாவது மகன் “செல்கிறேன்” என்று சொல்லிவிட்டுச் செல்லவே இல்லை. கடவுளுக்கு நமது வெற்றுச் சொற்களை விட, நம் உள்ளத்தின் உண்மையான மாற்றமே முக்கியம் என்பதை ஆண்டவர் நமக்கு நினைவூட்டுகிறார். கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை. “மாட்டேன்” என்பதிலிருந்து “செய்வேன்” என்றும், சுயநலத்திலிருந்து அன்பை நோக்கியும், அகந்தையிலிருந்து தாழ்ச்சியை நோக்கியும் நம்மைத் தொடர்ந்து அழைக்கிறார்.

இரண்டாம் வாசகத்தில், திருத்தூதர் பவுல் அடிகளார் கிறிஸ்துவையே நமக்கு மாதிரியாகக் காட்டுகிறார். இயேசுவின் வாழ்வு தந்தை கடவுளுக்குத் தந்த விசுவாசமிக்க “ஆமாம்” என்பதாகவே இருந்தது. அவர் சிலுவைச் சாவு வரை தாழ்மையையும் கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்தினார். நாமும் கிறிஸ்துவின் அதே சிந்தையை கொண்டிருக்க அழைக்கப்படுகிறோம்.

இந்தத் திருப்பலியைத் தொடங்கும்போது, நம்முடைய சொல்லும் செயலும் ஒத்துப்போகாத தருணங்கள், கடவுளின் அழைப்பைத் தட்டிக் கழித்த நேரங்கள் ஆகியவற்றுக்காக வருந்துவோம். நம் தயங்கும் உள்ளங்களை, உண்மையுள்ள சீடர்களின் மனங்களைக மாற்றுமாறு ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## பாவ அறிக்கை மன்றாட்டு

ஆண்டவராகிய இயேசுவே, பாவிகளை பிதாவின் திராட்சைத்தோட்டத்திற்குத் திரும்ப அழைப்பதில் நீர் சலிப்படைவதில்லை: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

கிறிஸ்து இயேசுவே, தந்தையின் திருவுளத்தைச் செய்வதில் நிறைவான கீழ்ப்படிதலையும் தாழ்ச்சியையும் எமக்குக் கற்பித்தீர்: கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

ஆண்டவராகிய இயேசுவே, எங்களை "மாட்டேன்" என்பதிலிருந்து "செய்வேன்" என்ற மனமாற்றத்திற்குப் பொறுமையோடு வழிநடத்துவீராக
ஆண்டவரே, இரக்கமாயிரும்.

## பாவ மன்னிப்பு

நாம் வழிதவறி நடக்கும்போதெல்லாம் எம்மைத் திரும்ப அழைக்கும் எல்லாம் வல்ல இறைவன், நம் பாவங்களை மன்னித்து, கிறிஸ்துவை மேலும் உண்மையோடு பின்பற்ற எமக்கு வலிமை அளித்து, முடிவில்லா வாழ்வுக்கு நம்மை வழிநடத்துவாராக. ஆமென்.

## “மறையுரை“'

### “மாட்டேன்' என்பதிலிருந்து 'செய்வேன்' வரை:

***கிறிஸ்துவின் சிந்தையை வாழ்வாக்குதல்”***

ஒரு இளம் வயலின் மாணவன் பள்ளி இசை நிகழ்ச்சியில் வாசித்துக் கொண்டிருந்தான். அவனால் சரியாக வாசிக்க முடியவில்லை. ஸ்வரங்கள் பிசகின, தாளம் தப்பியது; பாதியிலேயே நிறுத்திவிடலாம் போல இருந்தது. வாசித்து முடித்ததும் அவமானத்தாலும் வேதனையாலும் தலைகுனிந்து நின்றான். ஆனால் அப்போது பலத்த கைதட்டல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தபோது, அவனது ஆசிரியர் மட்டுமே எழுந்து நின்று உற்சாகமாகக் கைதட்டிக்கொண்டிருந்தார். பின்னர் அந்த ஆசிரியர் அவனிடம், "நீ இன்னும் முழுமை அடையவில்லைதான்,

ஆனால் உன்னால் என்னவாக மாற முடியும் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

கடவுள் நம்மைப் பார்ப்பதும் இப்படித்தான். நாம் இப்போது இருக்கும் நிலையை மட்டுமல்ல, எதிர்காலத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக மாற முடியும் என்பதையும் அவர் பார்க்கிறார். தொடக்கம் மோசமாக இருந்ததாலோ, நம் பதில் பலவீனமாக இருந்ததாலோ, நாம் மீண்டும் மீண்டும் தோற்றுப்போவதாலோ அவர் நம்மை உதாசீனப்படுத்துவதில்லை.

இன்றைய நற்செய்தி இந்த மாற்றத்தைப் பற்றியதுதான்

“ மாட்டேன்' என்பதிலிருந்து 'செய்வேன்' என்ற மனமாற்றம்.

இயேசு இரண்டு மகன்களைப் பற்றிய கதையைக் கூறுகிறார். தந்தை முதல் மகனிடம், "மகனே, நீ சென்று திராட்சைத்தோட்டத்தில் வேலை செய்" என்கிறார். அவனோ, "மாட்டேன்" என்று நேரடியாக மறுக்கிறான். ஆனால் பின்னர் மனம் மாறி வேலை செய்யச் செல்கிறான்.

இரண்டாவது மகனோ, "சரி ஐயா, போகிறேன்" என்று மரியாதையாகச் சொல்லிவிட்டுச் செல்லவே இல்லை.

இயேசு இறுதியில், "இவ்விருவரில் யார் தந்தையின் விருப்பத்தைச் செய்தவர்?" என்று கேட்கிறார். பதில் தெளிவானது. அழகாகப் பேசியவன் அல்ல, தன் செயல்களால் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றியவனே!

"வார்த்தைகளை விடச் செயல்களே உரக்கப் பேசும்" என்ற பழமொழி உண்டு. அது எவ்வளவு உண்மை! ஒருவர் உதவி செய்வதாக வாக்குக் கொடுத்துவிட்டு வரத் தவறலாம். இன்னொருவர் முதலில் தயங்கினாலும், தேவைப்படும் நேரத்தில் வந்து நமக்கு உதவி செய்வார்.

இயேசு இந்தக் கதையை அக்கால சமயத் தலைவர்களுக்கு ஒப்பிட்டுக் கூறி அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கினார். வரி தண்டுபவர்களும் விலைமகளிரும் உங்களுக்கு முன்பாகவே இறையாட்சிக்கு உட்படுகிறார்கள் என்கிறார். ஏன்? "மாட்டேன்" என்று சொன்ன பாவிகள் மனம்மாறி கடவுளிடம் வந்தார்கள்; ஆனால் சமயத் தலைவர்களோ

உதடுகளால் "சரி" என்று சொல்லிவிட்டு, தங்கள் வாழ்க்கையால் "மாட்டேன்" என்று வாழ்ந்தார்கள்.

இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்காவிட்டால், இது மிகவும் கடுமையான பேச்சு என்று நாம் நினைத்திருப்போம். சமுதாயத்தின் ஆன்மீகப் பெரியவர்களிடம் சென்று, "பாவிகள் உங்களுக்கு முன்பாக விண்ணரசு செல்வார்கள்" என்று சொல்வது சாதாரண விஷயமல்ல. ஆனால் இயேசு அதையே சொல்கிறார்.

நற்செய்தி என்பது நம்மைப் பார்க்கும் ஒரு கண்ணாடி. நாம் வரி தண்டுபவர்களாகவோ, விலைமகளிராகவோ இல்லாமல் இருக்கலாம். ஆனால் வெளியுலகிற்கு "சரி" என்று சொல்லிவிட்டு, உள்ளுக்குள் கடவுளை மறுதலிக்கும் தருணங்கள் நமக்கு எத்தனை உண்டு?

திருமணச் சடங்கின் போது, மணமக்களிடம்: "திருச்சபையிலும் உலகிலும் பொறுப்போடு வாழத் தயாராக இருக்கிறீர்களா?" என்று கேட்கப்படுகிறது. அவர்கள் "ஆம்" என்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் அந்த "ஆம்" வெறும் வார்த்தையாகவே நின்றுவிடுகிறது.

திருமுழுக்கின் போது பெற்றோரிடம்: "உங்கள் குழந்தையைக் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்க்க விருப்பமா?" என்று கேட்கப்படுகிறது. "ஆம்" என்கிறார்கள். ஆனால் பல குடும்பங்களில் விசுவாசம் மெல்ல மெல்ல மறைந்துவிடுகிறது.

சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உள்ள இடைவெளியை நாம் அனைவரும் அறிவோம்.

ஆனால் நற்செய்தி நம்மைச் சோர்வடையச் செய்வதற்காக அல்ல; நம்பிக்கை தருவதற்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு மோசமான தொடக்கம், மோசமான முடிவாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்கிறார் இயேசு. நமது ஆரம்பகால "மாட்டேன்" என்பதை, மெதுவாக உண்மையான "செய்வேன்" என்பதாக மாற்ற நாம் முயன்றால் கடவுள் அதை ஏற்றுக்கொள்கிறார்.

இன்றைய நற்செய்தியில் உள்ள மிக அழகிய வரி: முதல் மகன் "மனம் மாறினான்". அதுவே மனமாற்றத்தின் மையம். கிரேக்க மொழியில் இதற்கு "உள்ளத்தின் மாற்றம், யோசித்துத் திருந்துதல்" என்று பொருள்.

நமக்கும் இந்த அனுபவம் இருந்திருக்கும். ஒரு உதவியை முதலில் சிரமமாக நினைத்து மறுத்திருப்போம். பின்னர் யோசித்துப் பார்த்து, "சே, நாம் அப்படி நடந்துகொண்டிருக்கக் கூடாது" என்று உணர்ந்து உதவி செய்திருப்போம்.

ஒருமுறை ஒரு குரு, ஒரு குழந்தையின் திருமுழுக்கிற்கு முன் குடும்பத்தைச் சந்திக்கச் சென்றார். அப்போது தந்தை, "நான் திருமுழுக்கிற்கு வரமாட்டேன். நான் பல ஆண்டுகளுக்கு முன்பே திருச்சபையை விட்டு விலகிவிட்டேன். என் குழந்தையை இந்த விசுவாசத்தில் வளர்ப்பேன் என்று பொய் சொல்ல முடியாது" என்றார். அவர் மனைவி அதைக் கேட்டு அழுதார்.

திருமுழுக்கு நாள் வந்தது. சடங்கு தொடங்கியதும், ஆலயக் கதவு மெல்லத் திறந்தது. அந்தத் தந்தை உள்ளே வந்து மனைவியின் அருகில் அமர்ந்தார். குரு பெற்றோரிடம், "குழந்தையை விசுவாசத்தில் வளர்க்கத் தயாரா?" என்று கேட்டபோது, அந்த மனிதர் உறுதியாக "ஆம்" என்றார்.

சடங்கு முடிந்ததும் மனைவி மீண்டும் அழுதார்—ஆனால் இம்முறை மகிழ்ச்சியால்! அந்த மனிதர் பின்னர் முழுமையாக இறைநம்பிக்கைக்குத் திரும்பினார். அவர் சொன்னார்: "என் குழந்தைக்கு முன்னால் வேடதாரியாக வாழ நான் விரும்பவில்லை."

இதுவே மனமாற்றத்தின் மகிழ்ச்சி. ஒரு "மாட்டேன்" என்பது "செய்வேன்" என்று மாறும்போது விண்ணகம் மகிழ்கிறது.

கடவுள் பொறுமையுள்ளவர் என்பதை இன்றைய வாசகங்கள் நினைவூட்டுகின்றன.

புனித அகுஸ்தினார் பல ஆண்டுகள் கடவுளை விட்டு விலகி ஓடிய பின், "உண்மையான அழகே, உன்னை நேசிக்க நான் மிகவும் காலந்தாழ்த்தி விட்டேனே" என்று கதறினார். புனித பவுல் அடிகளார் கிறிஸ்துவை வன்முறையாக எதிர்த்தவர், பின்னரே தலைசிறந்த திருத்தூதரானார். பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்தார், பின்னரே திருச்சபையின் பாறையானார்.

கடவுள் நம்முடைய மோசமான தருணத்தைக் கொண்டு நம்மை எடைபோடுவதில்லை.

இரண்டாம் வாசகத்தில், பவுல் இயேசுவையே நமக்குச் சிறந்த முன்னுதாரணமாகக் காட்டுகிறார்:

“அவர் கடவுள் வடிவில் விளங்கியபோதிலும், கடவுளுக்கு நிகரான நிலையைத் தமதாக்கிக் கொள்ளவேண்டியதொன்றாகக் கருதாமல், தம்மையே வெறுமையாக்கி...” கிறிஸ்தவ வாழ்வு என்பது வெறும் ஆன்மீகப் பேச்சோ அல்லது சடங்குகளோ அல்ல. "இயேசு கிறிஸ்து கொண்டிருந்த அதே சிந்தையை நாமும் கொண்டிருப்பதே" அது.

**கிறிஸ்துவின் சிந்தை என்ன?**

அது தாழ்ச்சி! அது கீழ்ப்படிதல்! அது தன்னலமற்ற அன்பு! துன்பமும் சிலுவையும் வந்தபோதும் தந்தையின் திருவுளத்திற்கு "ஆமாம்" என்று சொன்ன கீழ்ப்படிதல்!

இயேசுவே இன்றைய வழிபாட்டின் உண்மையான மகன்—தந்தையின் விருப்பத்திற்குத் தன் வாழ்நாள் முழுவதையும் "ஆமாம்" என்று தந்தவர்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட மடல் இயேசுவின் வார்த்தைகளாக இதைக் குறிப்பிடுகிறது: "உம் விருப்பத்தைச் செய்ய இதோ வருகின்றேன்." கெத்சமனி தோட்டத்தில் மரண வேதனையிலும் இயேசு, "என் விருப்பம் அல்ல, உமது விருப்பமே ஆகட்டும்" என்றார்.

பவுல் அடிகளார் நம்மிடம்: "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த அதே சிந்தையை நீங்களும் கொண்டிருங்கள்" என்கிறார். அதாவது: அவரைப் போல வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.

இது கேட்பதற்கு அழகாக இருக்கிறது, ஆனால் வாழ்வது கடினம்.

நாம் எப்படி கிறிஸ்துவைப்போல மாற முடியும்?

வாழ்க்கையின் அன்றாடச் சூழ்நிலைகள் வழியாக, மெதுவாக, சில நேரங்களில் வேதனையான அனுபவங்கள் வழியாகவே அது சாத்தியமாகிறது.

ஒரு குரு தாழ்ச்சியைக் கேட்டு ஆர்வமுடன் ஜெபித்தார். அடுத்த சில நாட்களிலேயே அவரைச் சுற்றியிருந்தவர்கள் அவரைக் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினர். அவர்

மனமுடைந்து இறைவனிடம் முறையிட்டார். அப்போதுதான் அவருக்குப் புரிந்தது: "கடவுள் என் ஜெபத்திற்கு இப்படித்தான் பதிலளிக்கிறார். நான் அவமானங்களைச் சந்தித்தால் ஒழிய, தாழ்ச்சியை எவ்வாறு கற்றுக்கொள்ள முடியும்?"

நாம் பொறுமையைக் கேட்கும்போது, கடவுள் நமக்குக் கடினமான மனிதர்களை அனுப்புகிறார். இரக்கத்தைக் கேட்கும்போது, துன்பப்படும் மனிதர்களை நம்மிடம் அனுப்புகிறார். விசுவாசத்தைக் கேட்கும்போது, இருள்சூழ்ந்த காலகட்டங்களை அனுமதிக்கிறார்.

இவ்வாறாகக் கடவுள் நம்மைச் சிறிது சிறிதாகக் கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகிறார்.

"நாம் வெறும் மனிதர்கள்தானே" என்ற வார்த்தையை நாம் அடிக்கடிப் பயன்படுத்துகிறோம். சில நேரங்களில் சுயநலம், சோம்பல், சகிப்பின்மை போன்றவற்றுக்குச் சாக்குப்போக்காக இதைச் சொல்கிறோம்.

ஆம், நாம் மனிதர்கள்தான். ஆனால் நற்செய்தி அதைவிட மேலான ஒன்றைச் சொல்கிறது: நாம் கிறிஸ்துவைப் போல மாற அழைக்கப்பட்டிருக்கிறோம்! அதுவே நம் அழைப்பு.

இயேசு அன்பு செய்தது போல நம்மாலும் அன்பு செய்ய முடியும், இயேசு மன்னித்தது போல நம்மாலும் மன்னிக்க முடியும், இயேசு ஊழியம் செய்தது போல நம்மாலும் சேவை செய்ய முடியும் என்று கடவுள் நம்மை நம்புகிறார்.

ஒரு வாலிபன் விசுவாசத்தை விட்டுத் தூர விலகிச் சென்றான். கோவில், நற்கருணைச் சடங்குகளில் அவனுக்கு விருப்பமில்லை. ஒரு தவக்காலத்தில், அவன் தாய் அவனைக் கட்டாயப்படுத்தி ஒரு முதிய குருவிடம் ஒப்புரவு அருட்சாதனத்திற்கு (பாவசங்கீர்த்தனம்) அனுப்பி வைத்தார். அரைகுறை மனதுடன் அவன் சென்றான்.

அங்கு அவன் தன் சந்தேகங்கள், கோபங்கள், விரக்திகள் அனைத்தையும் கொட்டினான். அந்த முதிய குரு பொறுமையாகவும், பரிவோடும், அன்போடும் கேட்டார். எந்தக் கண்டனமும் இல்லை, புரிதலும் வழிகாட்டுதலும் மட்டுமே இருந்தது.

வீடு திரும்பிய அந்த இளைஞனின் முகம் பிரகாசமாக இருந்தது. அவன் தாயிடம் சொன்னான்: "அம்மா, அந்தச் சாமி என்னை நடத்துன விதத்தைப் பார்த்தப்ப, இயேசுவும் மக்களை இப்படித்தான் நடத்தியிருப்பார்னு தோணுச்சு."

இதுவே கிறிஸ்தவ வாழ்வின் இலக்கு: மற்றவர்கள் நம்மைப் பார்த்து, "இயேசு இப்படித்தான் வாழ்ந்திருப்பார்" என்று சொல்வதே ஆகும்.

ஆண்டவர் ஒரே இரவில் நம்மிடம் பரிபூரணத்தைக் கேட்கவில்லை. "மாட்டேன்" என்பதிலிருந்து "செய்வேன்" என்ற திசையை நோக்கி நாம் நகர வேண்டும் என்று மட்டுமே கேட்கிறார்.

அதனால்தான் திருச்சபை இந்த நற்செய்தியை நமக்குத் தருகிறது—நம்மைத் தண்டிக்க அல்ல, இன்னும் காலம் கடந்துவிடவில்லை என்று நம்பிக்கையளிக்க!

மூச்சு இருக்கும் வரை, மாறுவதற்கு இன்னும் நேரமிருக்கிறது. மீண்டும் தொடங்க நேரமிருக்கிறது. கடவுளுக்கு "ஆமாம்" என்று சொல்வதற்கு இன்னமும் நேரமிருக்கிறது.

ஒரு கதையோடு நிறைவு செய்கிறேன். சிற்பி ஒருவன் பெரிய மார்பிள் கல்லைச் செதுக்கிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்த ஒருவர், "நீ என்ன செய்யப் போகிறாய் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார். அதற்குச் சிற்பி, "இதற்குள் இருக்கும் உருவம் எனக்கு ஏற்கெனவே தெரிகிறது. தேவையில்லாத தேவையற்ற பகுதிகளைச் செதுக்கி அகற்றுவதே என் வேலை" என்றான்.

கடவுள் நம்மிடம் செய்வதும் அதுவே! நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் சாயலை அவர் ஏற்கெனவே காண்கிறார். மகிழ்ச்சி, துன்பம், தோல்வி, அருள், மனமாற்றம் ஆகியவற்றின் வழியாக, கிறிஸ்துவுக்குப் பொருந்தாத தேவையற்ற எல்லாவற்றையும் அவர் மெல்ல மெல்லச் செதுக்கி அகற்றுகிறார்.

ஒருநாள், உமது அருளால் மற்றவர்கள் நம்மைப் பார்த்து: "இவர் வாழும் விதம், பேசும் விதம், மன்னிக்கும் விதம்—இயேசு வாழும் விதத்தைப் போலவே இருக்கிறது" என்று சொல்வார்களாக. ஆமென்.

Prepared by: **Fr. Paul Julian,** Perth ,Australia
and Translated by: **Leonard Arulandhu,** Holy Family Church, Chennai